# இறையியல் களஞ்சியம்

## சிறப்பு இதழ்

# IRAI – IYAL KALANJIAM

**TAMIL THEOLOGICAL JOURNAL**

மலர் 21 | வைகாசி - 2021 | இதழ் 65

**இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி**

**மருதனார்மடம் - சுன்னாகம்**

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | அருட்பணி. A. கமலகுமாரன் |
| துணையாசிரியர் | : | அருட்பணி. M.D. போல்சுரேஸ் |
| ஆசிரியர் குழு | : | அருட்பணி. A. கமலகுமாரன் |
| | | அருட்பணி. J. தேவருட்செல்வம் |
| | | அருட்பணி.J.ஞானப்பிரகாசம் |
| மாணவர் குழு | : | சகோதரன்.S.பிரஞ்சனாத் |
| | | சகோதரன்.P.ஜோன்பிரகாஸ் |
| நிர்வாகி | : | அருட்பணி. A. கமலகுமாரன் |
| அச்சுப்பதிப்பு | : | துர்க்கா பிறிண்டேர்ஸ். |
| | | மல்லாகம். |
| வெளியீடு | : | இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி |
| | | மருதனார்மடம் - சுன்னாகம். |
| | | (தனிப்பட்ட விநியோகத்துக்கு மட்டும்) |
| Publication | : | Christian Theological Seminary of Sri Lanka |
| | | Maruthanarmadam – Chunnakam. |
| | | (For Private Criculation Only) |

# பொருளடக்கம்


1. ஆசிரியர் பார்வையில்…

**பதிப்பாசிரியர்**

2. மறைந்த தலைவரை மறக்க முடியாது

**அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்,**

3. “நற் செய்தியானான்”

**அருட்பணி.டி.எஸ்.மதியாபரணம்,**

4. பன்முக ஆற்றல் கொண்டவர்

**அருட்பணி.R.யோன்செல்வம்**

5: அருட்பணி. ஈனோக். P.புனிதராஜா வாழ்வும் பணியும்

**P.N. ஜெயசீலன்.**

6. “If Called to Lead Rev. Mr. Enoch Punitharajah

**Respectfully, Tom Blossom, Convener, Sri Lanka Partnership**

7. Memory of Rev.Enoch Punitharajah

**Rev. John Vertigan**

8. மண்ணில் விழுந்த கோதுமை மணி

**அருட்சகோதரன்.சி. டானியல் செல்வகுமார்**

9. இறையரசின் பங்காளிகள்

**அருட்பணி. ராஜன் றோகான்**

10. தொலைக்கப்பட்டது மீளவும் கிடைக்குமா....?

**அருட்பணி.வே.டேவிட் நிருஷிகன்**

11. உயிர்ப்பு….வாழ்வின் மையம்

**அருட்பணி. T. தேவநேசன்**


**(எழுத்தாளர்களின் கருத்துக்கள் அவரவரையே சாரும்)**

## மதிப்பிற்குரிய வாசகர்களே!

கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! இறையியல் களஞ்சியத்தின் சிறப்பு இதழ் வழியாக உங்கள் யாவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி.

இந்தச் சிறப்பு வெளியீடானது மறைந்த எமது இறையியல் கல்லூரியின் விரிவுரையாளரும், C.A.C.M. திருச்சபையின் முன்னாள் தலைவரும் ஊழியருமாகிய அருட்பணி. ஈனோக் பூரணமகிபன் புனிதராஜா அவர்களின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு ‘‘ஊழியமும் சமூகமும்’’ எனும் தலைப்பில் அவரின் நினைவாக வெளியிடப்படுகிறது.

இச் சிறப்பு மிக்க இதழான இறையியற் களஞ்சியமானது, அருட்பணி ஈனோக் பூரணமகிபன் புனிதராஜா அவர்களின் பூவுலக வாழ்வின் பதிவுகளையும் இறையியல் சார் கட்டுரைகளையும் சுமந்ததாக பிரசுரிக்கப்படுகின்றது.

அருட்பணி ஈனோக் பூரணமகிபன் புனிதராஜா அவர்கள் எமது கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் விரிவுரையாளராக நீண்ட வருடங்கள் பணியாற்றியவர். இதனடிப்படையில் இலங்கை கிறிஸ்தவ இறையியற் கல்லூரியானது தனது நீண்ட பயணத்தில் தன்னோடு இணைந்து பணியாற்றிய அருட்பணி ஈனோக் p.புனிதராஜா அவர்களின் மறைவின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு அவருக்கு மதிப்பளிக்கும் வகையில் இச் சிறப்பிதழினை வெளியிடுவதில் இறையியற் கல்லூரியின் குடும்பமானது நிறைவடைகின்றது.

இவ்விதழிலே பிரசுரிக்கப்படுகின்ற கட்டுரைகளை வாசித்து அதன் வழியாக நாம் கொண்டிருக்க வேண்டிய தலைமைத்துவப் பண்புகளை தொலைத்து விடாமல் மேலும் அன்பிலும் விசுவாசத்திலும் வளர்ந்து கிறிஸ்து இயேசுவின் சாயலிலே அவரின் தலைமைப்பண்புகளோடு எம்மை வளர்த்துக்கொள்ள முயற்சி செய்வோம். நமது ஆண்டவரின் தெய்வீகப் பாதுகாப்பும் ஆசிர்வாதமும் எங்கள் அனைவரோடும் இருப்பதாக.

பதிப்பாசிரியர்.

## மறைந்த தலைவரை மறக்க முடியாது

## அருட்பணி ஈனோக் பூரணமகிபன் புனிதராஜா (2012 - 2016)

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் வரலாற்றிலே 2020 ஆம் வருடத்தின் ஆரம்பமும் 2021 ஆம் வருடத்தின் ஆரம்பமும் மனித மனங்களில் அழியாப் பதிவுகளை ஆழமாகச் செதுக்கிவிட்டுச் சென்றுள்ளது. இத்திருச்சபையின் உருவாக்கத்திலும், நீதிக்கும் உண்மைக்குமான போராட்டங்களிலும் மிக அதிகமான பங்களிப்புக்களைக் கால நேரம் பார்க்காது பகிர்ந்து கொண்ட இரு அருட்பணியாளர்களை சற்றும் எதிர்பாராத நேரத்தில் திருச்சபை இழக்க நேரிட்டது. 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொரோனாத் தொற்று யாழ்ப்பாணக் குடாநாட்டினை அதிகமாக நெருக்கிக் கொண்டிருந்த வேளையில், அருட்பணியாளர் ஈனோக் போதகர் அவர்களின் மரணச் செய்தி காதுகளுக்கு எட்டியது. நம்பவே முடியவில்லை. அவர் மறைந்து ஒரு வருடம் கூட நிறைவு பெறுவதற்கு முன்னர் அருட்பணியாளர். எ.கே. சுரேந்திரன் போதகருடைய திடீர் மறைவு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய உணர்வுகளையே அன்பர்கள் அனைவருடைய மனங்களிலும் ஏற்படுத்தியது.

இச்சிறு எழுத்துருவாக்கமானது அருட்பணி. ஈனோக் போதகருடைய ஒரு வருட நிறைவினையொட்டி அவருடைய நினைவுகளைச் சுமந்து வெளிவருகின்றது. உடுவில் திருச்சபையினைத் தாய்த் திருச்சபையாகக் கொண்ட இவருடைய முழுப்பெயர் ஈனோக் பூரணமகிபன் புனிதராஜா என்பதாகும். இவர் 01.08.1965 இல் சாவச்சேரியைச் சேர்ந்த ஏர்வின் நல்லையா புனிதராஜா என்பவருக்கும் சங்குவேலியைச் சேர்ந்த கிறிஸ்டபெல் ஞானம்மா (nee தம்பு) என்பவருக்கும் மகனாகப் பிறந்தார். இவருக்கு இளையவர்களாக ஒரு சகோதரியும் ஒரு சகோதரனும் உள்ளனர். இவருடைய தாயார் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாணப் பேராயத்தினுடைய முன்னாள் இறைபணியாளரான வண. சாம் தம்பு அவர்களுடைய சகோதரியாவார்.

இவர் தன்னுடைய ஆரம்பக் கல்வியினை வெள்ளவத்தையில் உள்ள ஒரு ஆரம்பப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியினை கொழும்பு-07 இல் உள்ள D. S. சேனநாயக்கா மகா வித்தியாலயத்திலும் (தற்போது D. S சேனநாயக்கா கல்லூரி) உயர்தரக் கல்வியினை கொழும்பு றோயல் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். 1983 இல் இடம் பெற்ற ஜூலை இனக்கலவரம் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இவர், யாழ். பரி. யோவான் கல்லூரியில் இணைந்து கொண்டு தன்னுடைய கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் தோற்றிச் சித்தியடைந்தார்.

பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்த இவர், இந்தியாவின் தாம்பரம் நகரிலே அமைந்துள்ள "Madras Christian College" இல் கல்வி கற்று B.Com பட்டதாரியானார். இறை பணியில் வாஞ்சை கொண்ட இவர், இறையியல் பயிலுவதற்காக மதுரை, அரசடியில் உள்ள "தமிழ்நாடு இறையியல் கல்லூரியிலே" (T.T.S) 1991 இல் இணைந்து கொண்டார். 1996 இல் இறையியல் படிப்பினை B. D பட்டத்துடன் நிறைவு செய்த இவர், நாடு திரும்பித் தன்னுடைய இறைபணியினை, 1996 ஆம் ஆண்டு மே மாதம் மூளாய் திருச்சபையில் ஆரம்பித்தார். மூளாய், தொல்புரம் ஆகிய பகுதிகளில் 1996 முதல் 1997 வரையான காலப்பகுதியில் இவர் பணியாற்றும்போது, 1995 இல் இடம்பெயர்ந்த கிறிஸ்தவ இறையியல் கல்லூரியும் 1996 இல் மீள வட்டுக்கோட்டையில் இயங்கிக் கொண்டிருந்த இறையியல் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

1997 இல் கொழும்புத் திருச்சபையினுடைய உதவி ஊழியனாக மாற்றம் பெற்றுச் சென்ற இவர், 1997 - 1998 வரை கொழும்புத் திருச்சபையின் உதவி ஊழியனாகப் பணியாற்றினார். இக்காலப்பகுதியில் இவர் உதவிக்குருவாக அருட்பொழிவு பெற்றார்.

பின்னர், 1999 இல் முதுஇறையியல்மாணிக் கற்கை நெறிக்காக (M.Th) மதுரையில் உள்ள தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் இணைந்து கொண்ட இவர், சமூக ஆய்வியல் துறையிலே M.Th பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே சமூகவியல் துறையிலே M. A பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார். 2001ம் ஆண்டு நாடு திரும்பிய இவரை யாழ்ப்பாணப் பேராயம் நிரந்தரமான விரிவுரையாளராக கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு நியமித்தனர். அங்கு இருந்த இவர், கற்பித்தல் பணிகளுடன் சத்தியபுரம், உடுவில், இணுவில் எனும் திருச்சபைகளின் குருவாகவும் ஏழாலை தெற்கு, வடக்கு எனும் திருச்சபைகளின் சேகரக் குருவாகவும் பணியாற்றினார். இக்காலப்பகுதியில் (09.03.2002) வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் குருவாக அருட்பொழிவு பெற்றார்.

2007 ஆம் ஆண்டில், அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றிய இவருடைய ஆளுமையின் பல்வேறுபட்ட பரிணாமங்களை, இவருடைய நீதிக்கான உரத்த குரலின் வழியாகவும் துணிந்து நின்று செயற்பட்ட இவருடைய செயற்பாடுகளின் வழியாகவும் திருச்சபைச் சமுகம் என்றுமே அழிந்து போகாதபடிக்கு தம் வரலாற்றில் பதிவு செய்து வைத்துள்ளது. அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினுடைய ஆரம்ப காலப் பகுதியில் இவர், சில மாதங்கள் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் செயலாளராகப் பணியாற்றிய பின்னர், 2009 இல் நுவரெலியாவில் உள்ள உடப்புசலாவைத் திருச்சபைக்கு மாற்றம் பெற்றுச் சென்றார். மூன்று வருடங்கள் அங்கு இவர் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில், 2012 இல் இவர் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் மூன்றாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 2012 - 2016 வரை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவராகப் பல சவால்கள், பிரச்சினைகள், துன்பங்கள், எதிர்பார்ப்புக்கள் மத்தியிலேயும் துணிச்சலுடன் பணியாற்றினார். அதன் பின்னர் சில மாதங்கள் காரைநகர் திருச்சபையின் பணிகளைக் கவனித்து வந்த இவர்,

2018 மே மாதத்தில் நடைபெற்ற ஊழியர் பொது இடமாற்றத்தின்போது மறுபடியும் சத்தியபுரம் திருச்சபைக்கு இடம்மாற்றம் பெற்றுச் சென்று, அங்கு பணியாற்றினார்.

இவர் உடுவில் திருச்சபையினைச் சேர்ந்தவரும், உடுவில் மகளிர் கல்லூரியின் ஆசிரியருமான செல்வி. இவாஞ்சலின் டிலுக்ஷினி ஸ்பென்சர் அவர்களைத் தனது வாழ்க்கைக்கும் இறைபணிக்கும் துணையாகத் தெரிந்து கொண்டார். இவர்களுக்கு ரேச்சல் சூசன்னா, சன்றா ஜொகன்னா எனுமிரு பெண் பிள்ளைகள் உள்ளனர். போதகரம்மாவை எல்லோரும் டிலோப் போதகரம்மா என்று அன்பாக அழைப்பார்கள். இவர் தற்பொழுது கொழும்பு, பொராளையில் உள்ள ஒரு சர்வதேச பாடசாலையில் கல்வி கற்பிக்கின்றார்.

இவருடைய எதிர்பாராத இழப்பினால் துயருற்றிருக்கின்ற போதகரம்மா, பிள்ளைகள், சகோதரங்கள், திருச்சபை மக்கள், உறவுகள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இறையாறுதல் கிடைக்கப் பிரார்த்திப்பதும் அடியவனுடைய இறைபணிக்காகக் கடவுளுக்கு நன்றி சொல்லுவதும் எங்கள் அனைவருடையதுமான கடமையாகும். ஈனோக் போதகருடைய, சமூகத்தை நேசித்துப் பணியாற்றிய தாராள மனதுக்காகவும், சிறுபிள்ளைகளை நேசித்துப் பணியாற்றிய கள்ளமில்லாத உள்ளத்துக்காகவும், துணிச்சலோடு நீதிக்காகக் குரல் கொடுத்த நேர்மையான பங்களிப்புக்களுக்காகவும், அன்பான கணவராகவும், பாசமுள்ள தந்தையாகவும் பொறுப்புள்ள சகோதரனாகவும், நல்லதொரு ஆயனாவும வாழ்ந்து காண்பித்த முன்மாதிரியான அனைத்துப் பணிகளுக்காகவும் ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.

**ஆக்கம்**
**அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்,**
**அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை,**
**மானிப்பாய்.**

## “நற்செய்தியாளன்”

திருமறையிலே புதிய ஏற்பாட்டில் மாற்கு நற்செய்தி நூல் ஆசிரியர் மாற்கு 1:1 இல் கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் தொடக்கம் என ஆரம்பித்து தன் நூலை நிறைவு செய்யும் போது மாற்கு 16:15 “இயேசு அவர்களை நோக்கி உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” என நிறைவு செய்கின்றார்.

மாற்கு நற்செய்தி நூல் அவசரம் அவசரமாக எழுதி அவசரமாக முடிக்கிறார் போல் தெரிகின்றது. காரணம் ஏனைய நற்செய்தி நூல்களில் இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் நடைபெற்ற நிகழ்வுகள் கூறப்பட்டுள்ள நிலையில் மாற்கு மட்டும் உயிர்ப்பின் பின் நடைபெற்ற நிகழ்வுகளை எழுதாமல் முடிக்கிறார். ஆனால் தான் தொடங்கிய நோக்கத்தை அதாவது நற்செய்தி தான் இயேசு என்றும் அவர் தான் மானிட மகன் என்றும் குறிப்பிடுகின்றார்.

இதனை நான் ஏன் எழுதுகின்றேன் என நீங்கள் சிந்திக்கக் கூடும். இக்கட்டுரை மறைந்த அருட்பணி ஈனோக் புனிதராஜா அடிகளாரின் வாழ்வும் பணியையும் எண்ணிப்பார்க்கின்ற போது அவரது வாழ்வும் பணியும் அவசரமாக முடிந்ததைப் போல் தோன்றுகின்றது.

திருமறையில் தொடக்கநூல் 5:20 – 24இல் ஏனோக்கைக் காண்கிறோம். இங்கேயும் ஐந்து வசனங்களில் முந்நூற்று அறுபத்தைந்து (365) ஆண்டுகள் வாழ்ந்த இவர் கடவுளோடு நடந்தவரென்றும், கடவுள் அவரை எடுத்துக் கொண்டார் என்றும் காண்கின்றோம். காயீன் ஆபேல் கொலைக்குப் பிற்பாடு தீய செயல்கள் தலைவிரித்தாடிய போது ஒரு மனிதன் மட்டும் கடவுளோடு நடப்பதையும் கடவுள் அவரை எடுத்துக் கொள்வதும் ஆச்சரியம் தான்.

இன்று நாம் காணும் ஈனோக்கும் கடவுளோடு இம்மண்ணகத்தில் நடந்த மனிதன். ஆனால் மாற்கு நற்செய்தி நூல் ஆசிரியர் கூறுவதைப் போல் அவசரமாக தனது வாழ்வை முடித்துக் கொண்டவர். ஆயினும் அவர் வாழ்ந்த காலத்தில் அவரே ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியாளன்.

திருமறையில் யூதர்கள் புறஜாதிகள் எனக் கூறப்படுவது போல் ஒரு காலத்தில் யாழ் திருச்சபை பாரம்பரியத்தில் உயர் சமூகத்து மக்கள் கீழ் சமூகத்து மக்கள் என்ற பாகுபாடு இருந்த காலத்தில் தன் பணியை கீழ் சமூகத்தோட செய்வதில் மகிழ்வு கண்டவர். அப்போஸ்தலன் நூலில் சவுலின் மனமாற்றத்தின் பின் அனனியாவுக்கும் ஆண்டவருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலில் தி.ப 9:15 இல் "நீ செல் அவர் பிற இனத்தவருக்கும் அரசருக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கிறார். என்ற வாக்குக்கிணங்க ஈனோக் அடிகளாரும் கீழ் சமூகத்து மக்கள் மத்தியில் ஓர் சிறந்த நற்செய்திப் பணியாளன் ஆனார்.

ஒரு காலத்தில் அருட்பணி D.C.இரட்ணசிங்கம் போதகர் நற்செய்திக் கூட்டம் நடாத்துகின்றார் என்றால் அவரது நற்செய்திக் கூட்டத்தில் வாலிபனான ஈனோக்கை காணலாம். ஈனோக். இல்லா நற்செய்திக் கூட்டம் இல்லை. இக்கூட்டத்தில் நிச்சயமாக வில்லுப்பாடல் இருக்கும். வில்லுப் பாடலில் கேள்விக் காரன் வாலிபன் ஈனோக் அவரது கேள்வி நகைச் சுவை ததும்பியது. அக்கூட்டத்தில் இருக்கும் சிறியவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை தங்கள் கவலைகளை மறந்து இருக்கும் சூழலை ஏற்படுத்த நற்செய்தியாகிய இயேசுவை நசுக்காக கூறி வழி ஏற்படுத்திக் கொடுப்பார்.

இவரது வாலிப காலத்தில் வர்த்தகப் பிரிவில் B.Com பட்டத்தைப் பெற்று, இறையியல் கல்வியிலும் M.Th வரை கற்றுத் தேறியவர்.

இவ்வளவு கல்வியின் சிறப்பு இருந்த போதும் ஆண்டவரே அதிகார வேட்கை அற்றவராக தாழ்மையின் சொருபியாய் நற்செய்தியாகிய இயேசுவுக்காக எல்லாவற்றையும் பவுல் அடிகளார் சொன்னதைப் போல் அர்ப்பனும் குப்பையும் தூசியுமாக எண்ணுகிறேன்'' என்பதை தன் பட்டங்களையும், கல்வி அறிவையும் இறை பணிக்காக அர்ப்பணித்தவர்.

கொவிட் - 19 னால் நாடும் நாட்டு மக்களும் ஆலய வழிபாடுகளும் முடக்கப்பட்டிருந்த நாட்களில் (2020 March 19 இன் பின்னர்) அடியவனும் நோயோடு போராடத் தொடங்கி விட்டார். 2020 குருத்தோலைப் பவனியின் நாட்களில் ஆலய வழிபாடுகள் இல்லாதிருந்த போதும் தன் சபை வாலிபர்கள் மூலம் குருத்தோலைவெட்டி சிலுவை பின்னி தான் ஒவ்வொரு சபையாருடைய இல்லங்களை தரிசித்து ஜெபம் செய்து சிலுவைகளை கொடுத்து ஆசீர்வதித்தார். இந்நிகழ்வு அவர் இறுதியாக பணியாற்றிய சத்தியபுரம் சபையில் கண்ட காட்சி.

அப்போது ''ஐயா ஏன் இவ்வளவு நோயோடு நடக்க முடியாமல் வருகிறீர்கள்.'' சபையார் ஒவ்வொருவரையும் போன் பண்ணி வந்து எடுக்கச் சொல்லி இருக்கலாமே என்று நான் கூறிய போது போதகர் ஐயா சபையாரை கஷ்டப்படுத்தக் கூடாது இது சிலவேளை என் கடைசி சந்திப்பாகவும் இருக்கலாம். நான் பணியாளன், நற்செய்தியாளன், நான் தான் வரவேண்டும் என்று கூறிய போது குரலில் தளம்பல் ஏற்பட்டு கண்களைத் துடைத்தார். அப்படியாக ஒரு அருமையான மேய்ப்பன் மட்டுமல்ல நற்செய்தியாளன்.

ஓர் நற்செய்தியாளனுக்கு துணிவு வேண்டும். இத்துணிவு இவரிடம் இருந்தது. இத்துணிவை நம்சபையில் ஏற்பட்ட சீர்திருத்தத்தின் பின்னர் தான் நம்மில் பலர் கண்டிருக்கக் கூடும். ஆனால் தன் பணிக்களத்தில் உள்ள மக்களுக்காக துணிவோடு செயற்பட்டவர். 1997ம் ஆண்டு மூளாய் - தொல்புரம் கிராம சபையை நடாத்திய போது யாழ்

இடம்பெயர்ந்து மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு இலங்கை இராணுவத்தின் கீழ் மக்கள் வாழ்ந்த அந்தக் காலத்தில், தொல்புரத்தில் சபையார் ஒருவர் திரு.எஸ்.சின்னத்தம்பி இறந்து அவரது உடலை அடக்கம் செய்யக் கொண்டு செல்ல இராணுவம் மறுத்த போது இராணுவ வீரர்களுடன் தர்க்கப்பட்டு அந்த உடலை அடக்கம் செய்யக் கொண்டு சென்ற துணிந்த நற்செய்தியாளன்.

அதுமட்டுமல்ல, 1997 இல் மாற்றலாகி சத்தியபுரம் வந்து பணியாற்றிய காலத்தில் இராணுவ கெடுபிடிகளில் இருந்து வாலிபர்களை கிராமத்து மக்களைக் காப்பாற்ற ஆலயத்தில் தொடர்ச்சியான வேதப்படிப்பு, பாடல்கள், பயிற்சி, வழிபாடுகள் என மக்களை கெடுபிடிகளில் இருந்து காப்பாற்றிய நல்ல மனிதன் நற்செய்தியானர்.

அக்காலத்தில் தலையாட்டிப் பொம்மையூடாக சபைப் பெண் பிள்ளை ஒன்று பிடிக்கப்பட்ட போது இராணுவ முகாம் தேடிச் சென்று அப்பிள்ளையை மீட்டு வந்தார். இறையியல் கல்லூரியில் இருந்து பயிற்சிக்காக வந்த மாணவன் செ.செல்வந்தாவின் கல்லூரி அடையாள அட்டையை உடுவிலில் அமைந்திருந்த இராணுவ முகாம் இராணுவ வீரர்கள் கிழித்தெறிந்த போது அம்முகாம் அதிகாரியோடு போய் தன் துணிவைக் காண்பித்தவர். பிற்பட்ட காலங்களில் திருச்சபை வழக்குகள் நேரத்திலும் துணிந்து நின்றவர்.

தொல்புரம் கிராம பணிக் காலத்தில் இராணுவத்தால் பிடிக்கப்பட்ட வாலிபர்களை சிறை மீட்ட சிறைக் காவலன். அதனால் தான் இக்கிராம மக்கள் இன்று வரை தங்கள் இதயங்களில் கோயில் கட்டி வழிபடுகிறார்கள்.

பெரியவர்கள், சிறியவர்கள், முதியவர்கள் என எல்லாருக்கும் ஏற்றால் போல் தன் திறமையினால் நற்செய்தியை நல்கினார். அன்றும்,

என்றும், ஈனோக் பாதிக்கப்பட்ட மக்களோடு மட்டுமல்ல, பாதிப்பை ஏற்படுத்தும் கும்பலுக்கும் கிறிஸ்துவின் அன்பைக் காண்பித்தவர்.

இந்தப் பணி வன்னி, மிஷன் செய்து வரும் ஆண்களுக்கான திருப்பணியில் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் பலாத்காரம், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள், குடிபோதையினால் பாதிப்பை ஏற்படுத்துவோருக்கான விழிப்புணர்வு செயற் திட்டங்களில் அயராது உழைத்தவர். இது இவரது நற்செய்தியின் சிறப்பு இயேசுவும் பாதிக்கப்பட்ட மக்களோடு தன்னை இணைத்துக் கொண்டாலும், பாதிப்பை ஏற்படுத்துவோரை கண்டித்ததையும் காண்கின்றோம். ஒரு கட்டத்தில் இயேசு ஏரோதுவை கண்டிக்கும் போது "அந்த நரிக்குப் போய் சொல்லுங்கள்" என்ற துணிவை ஈனோக்கிலும் கண்டோம்.

அதற்கு காரணம் அவரது மொழித் திறமைகள். மொழிகளில் ஒரு வித்தகன். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளில் அமையத்தின் ஆலோசகராகவும், அம்மக்களுக்காக குரல் கொடுத்த ஒரு சிம்மக் குரல் ஓய்ந்து விட்டது. குரல் ஓய்ந்தாலும் அவரது வாழ்வு நற்செய்தியாக இன்றும் ஒலிக்கின்றது. எனவே தான் நற்செய்தியாளனாகினான் என வர்ணிக்கின்றேன்.

எல்லா சமயங்களிலும் ஒரு பித்தன் சமய உரையாடல்கள் மூலம் சமூகங்களிலுள்ள காழ்ப்புணர்ச்சிகளை அடியோடு அகற்ற அரும்பாடுபட்டவர். ஏனைய சமய மக்களோடு நல் உறவை பேணியவர். இன்றும் தொல்புரம், மூளாய், சத்தியபுரம், உடப்புசலாவ, மக்கள் அவரைப் போற்றி கதைப்பதை எம் காதுகளில் ஒலிக்கின்றது.

சத்தியபுரம் சபை ஈனோக் போதகரின் தாய்ச் சபையாகிய உடுவிலின் செல்லப்பிள்ளை. அதனால் இச்சபை மக்களை சபையார் என்று பாராமல் தன் சகோதர சகோதரிகள் என நினைத்து கடைசி வரை

அங்கேயே தங்கியிருந்து தன் சாவைத் தழுவிக் கொண்டார். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் உயிரையே கொடுப்பதைப் போல் தன் பணிக்களத்திலே தன் வாழ்வை முடித்துக் கொண்டார்.

இதற்கெல்லாம் காரணம் அவரது சமூக ஆய்வுக் கல்வி. அவர் இந்தியாவில் உயர் கல்வியைக் சமூக ஆய்வில் செய்த போது மூட்டை சுமக்கும் மக்களோடு ஐந்து ரூபாவுக்கு மூட்டை சுமப்பார். பணத்துக்காக அல்ல அந்த மக்களின் வலி வேதனைகளை தான் அறிந்து தன் ஆய்வை திறமையாக்குவதற்கு செயற்பட்டவர்.

இந்த செயற்திறன் தான் எல்லா துறைகளிலும் அவரை முன்னேற்றப் பாதையில் கொண்டு வந்தது. அதனால் அவரே நற்செய்தியாளன்.

“துணித்தவனுக்கு தூக்கு மேடை சந்தன மெத்தை” என்ற சினிமா வரிகள் எனக்கு ஞாபகம் வருகின்றது. ஏனென்றால் அவ்வளவு துணிச்சலுள்ள சிறந்த நற்செய்திப் பணியாளன் ஈனோக்.

நற்செய்திப் பணியாளனுக்கு பஞ்சன மெத்தை கிடைக்காது. முள் கீரிடம் தான் கிடைக்கும். அது கிடைத்தாலும் ஏற்க ஆயத்தமாக இருந்து பணியாற்றிய ஒரு பண்பாளன். இவர் தான் தன் வாழ்வை அவசர அவசரமாக மாற்கு நூல் முடிந்தவைப் போல முடித்துக் கொண்டார். நற்செய்தியில் தொடங்கி நற்செய்தியில் முடிந்ததைப் போல இயற்கையின் பால் அன்பு கொண்டவராக இயற்கையை நேசித்தவராக சிறந்த நற்செய்தியாளனாக அவரே நமக்கு நற்செய்தியாளன்.

இவையெல்லாம் அவரின் சிறப்பு பணிகளாக இருந்தாலும், திருச்சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்று நான்கு வருடப் பணிகள் அவரது பணிக்கு களங்கத்தை ஏற்படுத்தியதாக பலர் நினைக்கலாம்.

அவரின் பணியின் நிலை அவரை அறியாமலே கோபம், பதட்டம், முகவாட்டம், அவசர வார்த்தைகள் இவற்றுக்கு கொண்டு சென்றது. ஓர் நற்செய்தியாளனுக்கு இவை இருக்க கூடாது என வாதிட முடியாது. பணிக்கு உந்து சக்தியாக இருக்கலாம்.

இப்பண்புகள் பல இறைவாக்குனர்களுக்கு, சீடர்களுக்கு இருந்தது. இந்த பண்புகள் பல மறைமுகமாக பணிகளுக்கு உந்து சக்தியாகவும், களங்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தது.

என்ன தான் எழுதினாலும் ஈனோக் அடிகளார் நற்செய்தி சொன்னார் என்பதை விட நற்செய்தியாளனாகவே வாழ்ந்தார் என்பது சாலப் பொருத்தமானது.

**அருட்பணி. டி.எஸ்.மதியாபரணம்,**
**இணைப்பாளர்,**
**வன்னி மிஷன், முறிகண்டி / பாரதிபுரம் சபைக்குரு**

# பன்முக ஆற்றல் கொண்டவர்

அருட்திரு.ஈனோக்புனிதராஜா போதகரை 2001ம் ஆண்டு மதுரை இறையியல் கல்லூரியில் கண்டு பழகினேன். ஒரு வாரங்கள் இறையியல் கல்லூரியில் தங்கியிருந்தோம். அப்பொழுது அவரின் திறமைகளையும் ஆற்றல்களையும் கண்டு பழகியிருந்தேன். பின்னர் எனது பணித்தளங்கள் எல்லாம் அவரின் திறன்களை பயன்படுத்தி பல திருச்சபை மக்களை பலன் அடைய செய்தேன். கோணாவில் நெடுந்தீவு, கல்மடு, இராசேந்திரகுளம், வவுனியா, பூவரசங்குளம் ஆகிய திருச்சபைகளில் என்னிலும் பார்க்கிலும் ஈனோக் அவர்களை விசாரிக்கும் அளவுக்கு அவரின் திறமைகளை கண்டு பன்முக ஆற்றல் கொண்ட தலைவனாகக் கண்டு கொண்டேன்.

## மொழிகள்

அருட்பணி ஈனோக் அவர்களின் சிறுபராயங்களை அறியமாட்டேன் அவர் உடுவிலிலும், பின்னர் கொழும்பிலும் இந்தியாவிலும் வாழ்ந்த வாழ்க்கை எடுத்து இயம்பினார். அவரின் மொழி ஆற்றல்மிக்கவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிங்கள மொழிகளை சரளமாக பேசும் அளவும் மற்றவர் புரிந்து கொள்ளும் அளவுக்கும் பேசும் திறன் கொண்டவர். சிறுவர்கள் வாலிபர்கள் முதியவர்களுக்கு ஏற்றதாக பேசுகின்ற தன்மை படைத்தவர். ஒரு விடயத்தை வெற்றி அளிக்கும் வகையில் செய்வதற்கு ஏற்றதாக அவரின் மொழித்திறன் காணப்பட்டது.

பாடல் கவிதை பேசும் நடிப்பு, நகைச்சுவை மேலும் அவரின் பாடல் திறமையும் கவிதை எழுதும் ஆற்றலும் பேசும் வகையும் ஒரு விடயத்தை நடித்து காட்டும் தன்மையும் நகைச்சுவையுடன் குழந்தைகள், சிறுவர்களுக்கும் எடுத்துக்காட்டும் தன்மை

கொண்டவர். அதனால் எளிதில் ஒரு விடயத்தை புரிந்து கொண்டு செயற்படவைத்தவர்.

### ஓர் சமூகவியலாளன்

சமூகத்தை நன்கு புரிந்து கொண்டவர் சமூகவியல் கற்றதனாலும் தனது வாழ்க்கை முறையாலும் சமூகத்தை கூர்ந்து கவனித்து செயல்படும் தன்மை கொண்டவர். ஏழைகள், முதியோர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் நோயுற்று இருப்போருடன் நீண்டநேரம் உரையாடி அவர்களின் மனநிலைகளை அறிந்து ஆறுதல் கூறுதலும் ஏற்றஉதவிகளை வழங்கும் தன்மையும் படைத்தவர். எப்படியான தொடர்புகளை அவர்களுக்கு ஏற்படுத்தி கொடுக்கவேண்டும். உரியவர்களிடம் சென்று தொடர்பை ஏற்படுத்தும் ஆற்றல்மிக்கவராக இருந்தார்.

### இறையியலாளன்

கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம், பௌத்தம் ஆகிய சமயங்களில் உள்ள இறையியல் தன்மைகளை ஆழமாக கற்றவர் சமயங்களில் இருக்கும் குறைநிறைகளையும் சமய சித்தார்த்தங்களையும் ஆழமாக கற்று இறை வெளிப்பாட்டை கொண்டு செயல்பட்டார். அதனால் எல்லா மதங்களின் தாற்பரியங்களையும் அறிந்து உரையாற்றும் தன்மை கொண்டவராக இருந்தார். இறையியல் சிந்தனைகளை மிகவும் எளிதில் புரிந்து கொள்ள செய்வதிலும் மிகவும் நுட்பமாக வெளிப்படுத்தியவர்.

### துணிவு உள்ள தலைவர்

துணிந்து எதையும் செய்யும் ஆற்றல் கொண்டவர் அதனால்தான் பல விடயங்களை சாதனைகளாக மாற்றினார். இவரின் துணிவும் சமூகத்தை அறிந்து செயற்படும் தன்மையைக் கண்டு பல சமூகத்தை சார்ந்தவர்கள் சமூக பணியில் இணைத்து பலன் அடைந்தார்கள்.

**அருட்பணி.R.யோன்செல்வம்**

**குருமுதல்வர், வன்னி**

# அருட்பணி ஈனோக் புனிதராஜா அவர்களின் வாழ்வும் பணியும்.

2020ம் ஆண்டு மே மாதம் எட்டாம் திகதியன்று திருச்சபை மக்கள் அனைவரையும் பேரதிர்ச்சிக்கும் மாறாத சோகத்திற்கும் உள்ளாக்கிய சம்பவமாக ஈனோக் போதகர் என அனைவராலும் அழைக்கப் பெற்ற அருட்திரு ஈனோக் P புனிதராஜா அவர்களின் மறைவு அமைந்தது. அவரைப் பற்றிய நினைவுகளை எழுத்துருவில் பகிர்ந்து கொள்ளுமாறு போதகரம்மா திருமதி டிலோ புனிதராஜா அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டார். ஈனோக் போதகர் என்னுடன் ஒரு நல்ல நண்பனாக, சகோதரனாக, பழகியவர். அவரும் நானும் பல விடயங்களை, பல துறைகளைப் பற்றி பல அனுபவங்களை பகிர்ந்து கொண்டவர்கள். அவர் கீழைத்தேச, மேலைத்தேச சங்கீதத்தை விமர்சிக்குமளவுக்கு அவற்றில் ஈடுபாடுடையவர். நன்கு பாடக்கூடிய திறமையுள்ளவர். அவரது பல்வேறுபட்ட ஆளுமைகளைப் பற்றி இன்று முழுக்க நான் எழுதிக் கொண்டிருக்கலாம். ஆனாலும் அவரது கருத்துகளும் அவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அவரது பாங்கும் என்பது பற்றி எனது பார்வையை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். எனக்கு இவ்வாய்ப்பைத் தந்த போதகரம்மா திருமதி டிலோ புனிதராஜா அவர்களுக்கும், இக் குறிப்பினை பதிவிடுகின்ற மருதனார்மடம் இறையியற் கல்லூரி சஞ்சிகை பகுதிக்கும் நன்றி.

ஈனோக் போதகர் இறையியல் கல்லூரியில் பல வருடங்களாக விரிவுரையாளராகப் பணியாற்றியவர். கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள் பலவற்றில் அரிய கருத்துக்களையும் கண்ணோட்டங்களையும் முன்வைத்தவர்.

சபைகளில் திருமறைப்படிப்புகளை ஆர்வத்துடன் நடத்தி வந்தவர். அவரது அருளுரைகள் மூலமாக மிகவும் ஆழமான இறையியல் உண்மைகளை அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய விதமாக கூறிவந்தவர்.

அவர் அருளுரைகளை மிகவும் கவனத்தோடு, நிதானமாக, புத்தகங்களைத் தேடி ஆராய்ந்து தயாரிக்கும் வழக்கமுடையவராக இருந்தார். இதே பாணியிலேயே தமது பொதுவான உரைகளையும் அவர் தயாரிப்பார். செவிமடுக்கும் மக்கள் அனைவருக்கும் தாம் சொல்ல வந்த விடயம் தெளிவாக, சரியாக விளங்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை கொண்டவராக அவர் விளங்கினார். பொதுவாகவே அவரது அருளுரைகள் நேர வரையறையை மீறிவிடும். அதைப் பற்றி அவர் கவலைப்படமாட்டார். எல்லாருக்கும் விளங்க வேண்டும் என்பது மட்டுமே அவர் நோக்கமாக இருக்கும்.

அவரது இந்த இயல்பு அவர் சாதாரணமாக உரையாடும் பொழுதும் காணப்பட்டது. தர்க்கம் பண்ணுவதில் அவர் வித்தகர். குரலை உயர்த்திப் பேசுவார். இதனால் சண்டை பண்ணுபவர் எனவும் அடையாளப்படுத்தப்படுவார். ஆனால் அவரை நெருக்கமாக அவதானித்தவர்களுக்கே அவரது இந்த சுபாவம் ஏன் என்பது புரியும். அவர் யாரையும் வெறுத்தவர் அல்லர். ஆனால் தமது கருத்தை மற்றவர்களுக்குப் புரியவைக்க வேண்டும் என்பதில் சிரத்தை உள்ளவராகவிருந்தார். மற்றவர்களின் கருத்துத் தவறானதெனத் தாம் கருதுமிடத்து, அதனை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும் என்பதில் மேலதிகமான அக்கறையுள்ளவராக அவர் காணப்பட்டார்.

தான் பணியாற்றக் கொடுக்கப்பட்ட சபையில் முழு மனதுடனும் விருப்பத்துடனும் பணியாற்றியவர். சபையாரின் ஆன்மீக வாழ்வில்

நாட்டம் கொண்டவர். 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்துக்கு முந்திய நாளில் அவரது தாயார் கொழும்பில் காலமானார். ஆனால் மறுநாள் தனது சபையாகிய சத்தியபுரத்தில் வழிபாட்டை நடத்திவிட்டே அவர் கொழும்பு சென்றார்.

சிறந்த சிந்தனையாளரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவருமான ஈனோக் போதகரின் பிரிவு துயரமானதே. அவரது ஆத்துமா கடவுளுக்குள் அமைதிபெற பிரார்த்திக்கிறேன்.

**P.N. ஜெயசீலன்**

**கொழும்பு**

# “If Called to Lead,

For the Memorial Booklet honoring God for the ministry of Rev. Mr. Enoch Punitharajah On behalf of the Sri Lanka Partnership of the Church of the American Ceylon Mission (CACM). the Indiana-Kentucky Conference of the United Church of Christ (I-KyC-UCC), and extended partners around the world.

A Little Essay on Leadership, *If Called to Lead, Lead with all the Gifts and Strength God Gives You (and remember the Sabbath too, even as God did)*

(Romans 8.12, and Philippians 3.12-14)

To All who Remember and Honor The Life God gave the world and Jesus’ Church in Reverend Mister and Mrs. Enoch Punitharajah, who stepped up to Lead, and all who continue to strive to Honor our God as long as God gives us Life,

I remember well the enjoyable visit of the Rev. Enoch, President of the CACM and his wife to our Conference, and for a while to our home. Since the visit was back in 2013, and after the visit our correspondence concluded about eighteen months later, my memories are limited.

What I do remember is Rev. and Mrs. graciousness, how pleasant and informative the visit was, both around the Conference, to Indianapolis, and to our home. I was sad to hear how there had been some “falling out” between Rev. Enoch and others in the leadership of the CACM. And then I was saddened by recent news of his death from this facet of eternal Life.

I remember how happy he seemed to be to lead the CACM at that time and be representing you.  How I know he had tried to speak truth to power in the Rev. Dr. Thiagarajah.  How more churches left the CACM during his tenure, I think from 2012 to 2016.

He stayed with Jude Sutharshan some, who was here studying at our local CTS in Indi (I call yours CTS-J, the one here CTS-I, and my alma mater CTS-C /Chicago).  He visited around our Conference with several of us on the team, also Eden over in Saint Louis.  We were so happy for his visit.

I believe he grieved his own failures and those of people who might have stood with him.  Leadership is hard and the undoing of many. Leadership is challenging anywhere, and certainly most difficult in Sri Lanka.  All of you in the CACM are a great inspiration to us.  We pray to be up the task which God gives us, and it is by God's Grace that we are able to accomplish anything – not our skill.  Witness Jesus, Moses, Abraham Lincoln, Gandhi, Martin Luther King, Jr.  We depend on God, and all leaders have failures.  God help us accept ourselves, our limits, our gifts, and our challenges, all with God being our helper!

If one is really leading, there is always "push back."  If a leader doesn't lead, then they are not a leader.  The balance is difficult between leading yourself and a whole movement being led to "buy in" to the goals established by a leadership team.

All this is compounded by the history of the CACM, emerging from both civil war, a church movement fracture, and the period of unjust "peace" since the civil war's tragic ending. Further this is magnified in the CACM by the poverty as the church diversified and much of the establishment "old guard" left for what in English is called "greener pastures" in other nations. Also by jealousies in a minority community where for most there rarely seems to be "enough." And the contrast of younger people with new ideas and the elders among the church pastors/priests who just want to hold on, to whom innovation seems so risky and change seems too destabilizing. Then the difference between six decades plus with an episcopal system of government and now the return to the congregational system.

We in Indiana-Kentucky love the CACM, and we understand the near-inevitability of enormous challenges of the situations the minority Tamil community and churches face. We do pray for your leadershipin the CACM, for your striving for justice and peace, for your honoring God in Jesus' Faith, Hope, and Love, for all you can do lifting up the poor, for the well-being and education of children and youths, and for the challenges of living under a government which does not recognize you as equally human.

In the USA we are hopefully in a furthering of the history of our experiment in democracy by truly recognizing the effects of 400+ years of injustice and white supremacy. You certainly know how this is a real struggle in our nation as well as in our churches, where there are two

different visions of our future, carried forth by sinful humans on all sides. Can we continue our 250 year old experiment in democracy in a just and peaceful way, giving honor to the dignity of every human in our increasing diversity?  Or will we recede into a further “populist” unjust resumption of white supremacy?

In suchtimes the Rev. Enoch gave his all, with some successes and with some failures, as is true of all leaders.  The history of Indiana and Kentucky’s Abraham Lincoln is certainly full of both, and in his leadershiphe gave his life.  Let us in the memory of both our Abraham and our Rev. Enoch continue to pray and seek God’s leadership for both our churches and our cultures and nations.  Long live the memory of both to inspire us, and may God give them Peace in their place now in “eternal” Life in Jesus Faith.

**Respectfully, Tom Blossom, Convener, Sri Lanka Partnership**

# Memory of Rev.Enoch Punitharajah

Rev. Enoch served as my host when I visited churches and missions in Sri Lanka as part of a delegation from the Indiana-Kentucky Conference of the United Church of Christ in the USA. I remember him as gentle and humble; present as a leader in the church but dedicated to being a servant after the model of Jesus. His greetings to everyone were full of peace and sincerity. He smiled in a way that assured others they were welcomed in his sphere. He could also be forceful and stern when needed, as I witnessed on more than one occasion. It was clear to me, as we visited mission sites and churches, that children everywhere held him in high regard and more than once he filled our visit with children's singing and laughter.

I was able to serve as host to Rev. Enoch when he visited our churches in the USA, too. It was winter and there was a mighty storm. Enoch was effectively stranded in his room for two days. When I visited with him he was full of hospitality and smiles. The snow storm was an enjoyable event for him! Enoch preached at our Peace United Church of Christ in Ft. Wayne, Indiana and brought a lively message of the gospel to all in attendance. He was much appreciated there for his lifting up of Jesus Christ as the way, the

truth, and the life and we all felt much closer to our brothers and sisters in Sri Lanka because of his visit with us.

Not least of all, I remember with joy and sentimentality his late night visits to the popcorn machine in our hotel lobby in Ft. Wayne. The desk clerk told me Enoch came down to the lobby several times in the night to refill his bowl. He also enjoyed the pizza we shared for lunch. We both knew that we were not eating a healthy diet that day but we enjoyed the table fellowship so much as it reminded us of those other times when we shared a meal in Jaffna or elsewhere. On my last day in Sri Lanka he insisted we stop at Kentucky Fried Chicken in Colombo on our way to the airport. This action, because I was working with churches in Kentucky, USA, brought great laughter to our delegation and was a fitting way to end our visit.

So, my fondest recollections of Rev. Enoch involve the joy of children, the pleasures of table fellowship, and the power of the Gospel proclaimed in both our places of influence. I am thankful to have known him and I pray peace upon his family, his church, and his nation.

Blessings,
**Rev. John Vertigan**
**Conference Minister**
**Florida Conference, United Church of Christ**
**USA**

## *மண்ணில் விழுந்த கோதுமை மணி - யோவான் 12:24*

கோதுமை மணிமண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும் அதுமடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உலகில் உள்ள அனைத்து இயற்கை வளங்களும் (மரம்,செடி,கொடி) அனைத்தும் ஏதோ ஒருவிதை மண்ணில் விழுந்து மடிந்ததனால் தான், அது உயிர்ப்பு பெற்று பச்சைப் பசேல் என்ற காட்சியை கொடுக்கின்றது. விதை மண்ணில் மடிய வேண்டும் மானிடமகன் மாட்சி பெறுகின்ற நேரம் என்பது தன்னை மரணத்தின் கரங்களில் ஒப்புக்கொடுக்கின்ற தருணமாய் இருக்கின்றது. (யோவான் 12:23)

மாட்சி மிகுந்த மானிடமகனின் மரணத்தினால் மானுடம் மீட்சி பெறுகின்றது. இங்கு மரணம் என்பது ஓர் மீட்பின் செய்தியை நமக்குக் கற்றுக் கொடுக்கின்றது. கிறிஸ்தவம் கூறும் அறம் என்பது பாவத்திற்கு நாம் மரிக்க வேண்டும்.

கிறிஸ்தவ அறக் கோட்பாடுகளை சாதாரணமாக உலகத்தோடு ஒத்து வாழுகின்ற மனிதர்களால் கடைப்பிடிக்க முடியாது, காரணம் நாளாந்த நடைமுறை வாழ்க்கையில் அறக்கோட்பாட்டைக் கடைப்பிடிப்பது என்பது ஓர் எளிதான காரியம் அல்ல, அவை கடினமாகவே இருக்கின்றது. அறக்கோட்பாடாக நான் பார்ப்பது என்னவென்றால், கிறிஸ்துவோடு இணைந்து வாழும் வாழ்வாகவே அதை பார்க்கின்றேன். அப்படியானால் முதலில் நாம் கிறிஸ்துவோடு மரிக்கவேண்டும், இரண்டாவது பிறருக்கு கொடுக்கவேண்டும், மூன்றாவது உலக சிற்றின்பங்களை வெறுக்கவேண்டும். நான்காவது உண்மையாக துன்பக்கிண்ண சிலுவையைச் சுமக்கவேண்டும்.

இவை அனைத்தையும் இயேசுபிரான் மானுடத்திற்கு கற்றுக் கொடுத்தவையே. இவருடைய போதனை,வாழ்க்கைமுறைஅனைத்தையும் கண்ட கேட்ட சீடர்கள், தம்மை மீட்க வந்த மீட்பராக, விடுதலையாளராக இயேசுவைப் பார்த்தார்கள். அதிலும் குறிப்பாக ரோமாபுரி பேரரசின் அடிமைத் தனத்தில் இனிநாம் இல்லாமல்,விடுதலையான வாழ்வை வாழப் போகின்றோம் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அத்தருணத்தில் இயேசுதான் மரிக்கப் போகின்றேன் என்று கூறியது சீடர்களுக்கு மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுகின்ற திடீர் மரணங்களும் நமக்கு ஈடு கொடுக்கமுடியாத வேதனைகளைத் தந்து விட்டுச் செல்லுகின்றது. இயேசு தனது மரணத்தின் நோக்கத்தினை தெளிவாக விளக்குகின்றார். அதை யோவான் தன் நற்செய்தி நூலில் கூறுகின்றார். (யோவான் 1:29 இதோ! உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கின்ற தேவஆட்டுக்குட்டி) பாவம் மரிக்க இங்கே பாவம் இல்லாதவர் மரிக்கின்றார்.

அதுமட்டுமல்லாமல் இயேசுவின் மரணத்தின் நோக்கத்தினை மாற்கு நற்செய்தியும் தெளிவாக கூறுகின்றது. ஏனெனில் மானிடமகன் தொண்டு ஏற்பதற்கல்ல மாறாகத் தொண்டாற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் என்று கூறினார்(மாற்கு10: 45)மரிப்பதற் கூடாக வருகின்ற மீட்பினை இங்குநாம் காணமுடிகின்றது.

கிறிஸ்தவ அறக்கோட்பாடுகளை கடைப்பிடிப்பதற்கு ஒப்புக் கொண்ட நாம் முதலில் கிறிஸ்துவிற்குள் மரிக்க வேண்டும். கிறிஸ்துவிற்குள் மரித்தல் என்பது எமது சுய நலபோக்கினை, முதலில் மரிக்க செய்ய வேண்டும். (கலாத்தியர5:24) கிறிஸ்து இயேசுவிற்குள் உரியவர்கள், ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும், இச்சைகளோடும் சேர்த்து சிலுவையில் அறைந்து விட்டார்கள். சுயநலபோக்கு நம்மில் மரிக்கின்ற போது, இழிவுணர்வு, இச்சைகள்

எல்லாம் மரிக்கின்றது. நாம் பின்னர் கிறிஸ்துவின் உயிர்ப்புள்ள சாட்சிகளாய் உயிர் பெறுகின்றோம்.

விதையான கோதுமை மணி மண்ணில் மடிகின்ற போது, உயிர்ப்பின் உன்னதத்தை நமக்கு கற்றுக் கொடுக்கின்றது. இந்த விதையானது இரண்டு தன்மைகளை தன்னகத்தே வைத்திருக்கின்றது.

1. வேர் தன்மை கீழே ஆழமாக மண்ணை பற்றிப் பிடிக்கின்றது. இதை விஞ்ஞான விளக்கத்தில் எம்பிரியோ என்பார்கள்.
2. அடுத்த பகுதி மரமாக மேல் நோக்கி வளர்கின்றது. இதை குளோரோபில் என்பார்கள். இரண்டு செயற்பாடுகளும் நடைபெறவேண்டும் என்றால் முதலில் விதை மண்ணுக்குள் போட்டு புதைக்கப்பட வேண்டும்.

மண்ணுக்குள் புதைக்கப்பட்ட விதைக்குள் சரியான தட்பவெப்ப, நீர்ப்பாசன, சீதோசனநிலை கிடைக்கின்றபோது, அது தனது உயிர்ப்புநிலையினை ஆரம்பிக்கின்றது. விதை செழித்து வளர ஆரம்பிக்கின்ற போது,அதை சுற்றி பற்றிப் பிடித்திருந்த மேற்தோற் பகுதி மண்ணுக்குள்ளே விழுந்து, மண்ணோடு மண்ணாகிவிடுகின்றது. இங்கே விதையான கோதுமை மணி வளர ஆரம்பிக்கின்றது.

இறை அன்பர்களே! நமக்குள்ளும் தூய ஆவியானவரின் ஆளுகையும், வார்த்தையும் ஆழமாக வரவர, நம்மைச் சுற்றி காணப்பட்ட சுயநலப் போக்கு மண்ணோடு மண்ணாகி மரிக்க வேண்டும். அதற்கு ஆவியானவரின் ஆளுகையினை நமக்குள் அனுமதிக்க வேண்டும். வார்த்தை நமக்குள் கிரியை செய்ய அனுமதிக்க வேண்டும். அப்போது நமதுஆவிக்குரியஉயிர்ப்புள்ள
வாழ்வு ஆரம்பிக்கும். இறையோடு ஒத்து வாழுகின்ற தன்மை நமக்குள் வளர வளர,உலகோடு ஒத்துவாழும் மனிததன்மை நமக்குள் மரிக்கத் தொடங்கும்.

**கோதுமை மணிவிதையாக இருக்கும் வரை அது விதைதான். அது யாருக்கும் எந்தபலனையும் கொடுக்கமாட்டாது. அது அப்படியே தான் இருக்கும்.**

நாமும் நம்முடைய ஆணவப் போக்கும், சுயநலக்போக்கும், அடக்குமுறைப் போக்கும் நம்மை சுற்றி நமக்குள்ளே இருக்கின்ற போது,அது யாருக்கும் பயன் அற்றதாய் தான் காணப்படும்.

இறை சமூகத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் நம் சுயம் மரிக்க வேண்டும் விதை மரமாக வளரவேண்டுமென்றால், அது மண்ணில் மடிய வேண்டும், இறைவார்த்தையும் தூய ஆவியாரின் ஆளுகையும் நமக்குள் வரவேண்டும் என்றால், நம் சுயம் நலப்போக்கு நமக்குள் மரிக்க வேண்டும்.

கடவுள் ஒவ்வொரு விதைக்கும் மிகவும் சிறப்பான தன்மையினைக் கொடுத்திருக்கின்றார். ஒவ்வொரு விதைக்குள்ளும் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான அதேதன்மையுடைய விதைகளை உருவாக்க கூடிய தன்மையினை, கடவுள் கொடுத்திருக்கின்றார். ஆதியாகமம் 1:11 படைப்பின் உன்னத படைப்பாகிய இறைமக்களாகிய நமக்குள் எப்பேர்ப்பட்ட அதி உன்னதமான தன்மைகளை கடவுள் நமக்குள் வைத்திருக்கின்றார்.அதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான இறை சமூகத்தை கட்டி எழுப்பக் கூடிய தன்மையினை நம் ஒவ்வொருவருக்குள்ளும் கடவுள் வைத்திருக்கின்றார், அதை உணர்ந்தவர்களாய், நம் பணியினை செய்ய அழைக்கப்படுகின்றோம்.

அப்படியாக இறை சமூகத்தைகட்டியெழுப்ப, தன் சுயநலத்தை எப்போதே தனக்குள் மரிக்கச் செய்து, இறை சமூகத்தைகட்டியெழுப்ப அனுதினமும் பாடுபட்டவர் தான் மறைந்த முன்னாள் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் வணக்கத்துக்குரிய ஈனோக்

புனிதராஜா ஐயா அவர்கள். அமெரிக்கன் சிலோன் மிஷன் என்னும் இறை சமுகாயத்தை கட்டியெழுப்ப, கோதுமை மணியாக தன்னைமடிய செய்தவர். பல இறை அன்பர் சமூகத்தைதன் முயற்சியால் உருவாக்கியவர். பல இறைபணியாளரின் உருவாக்கத்திற்கு காரணமாய் திகழ்ந்தவர். தவிர்க்க முடியாத திடீர் இறை அழைப்பினால் எம் எல்லோரையும் விட்டுபிரிந்து இறைவரிடம் சென்று விட்டார். என்றும் மறவா நீங்கா உங்கள் நினைவுகளோடு, எங்கள் பணி தொடர்கின்றது. மறைந்த முன்னாள் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் தலைவர் வணக்கத்துக்குரிய ஈனோக் புனிதராஜா ஐயா அவர்கட்கு இக்கோதுமை மணியினை சமர்ப்பணம் செய்கின்றேன்.

உங்கள் வாழ்வுக்காக, சிறந்த பணிக்காக, உங்கள் வழிகாட்டலுக்காக என்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன். அதற்காக கடவுளை பிரார்த்திக்கின்றேன். என் வேண்டலில் எப்போதும் உங்களைக் கவர்ந்த வரிகளைப் இங்கே பதிவுசெய்கின்றேன்.

இறைவேண்டல் செய்வோம்

இறைவா! பிறப்பதன் நோக்கினை இறப்பில் வைத்தாய்,

மரணத்தில் மனிதத்தை மலரவைத்தாய்

இழந்ததை மீட்க இறந்து விட்டாய்

இருத்தலைக்காட்ட உயிர்த்து விட்டாய்

சிலுவை சுமந்துகொண்டு வாழச் சொன்னாய்,

சாகத்துணிந்தவன் தான் சீடன் என்றாய்

- ஆமென்.

மேகம் நீராவது போல் நாம் பிறந்து வந்தோம்,

நீர் மேகமாவது போல் இங்கிருந்து திரும்பிப் போகின்றோம்.

**அன்புடன்,**
**அருட்சகோதரன்,**
**சி. டானியல் செல்வகுமார்**

# இறையரசின் பங்காளிகள்
# (புழுதி இறையியல் கோட்பாடு 01)

இறையரசின் பங்காளர்களாக கிறிஸ்தவர்களாக மட்டுமே இருப்பர் என்பதும், அதிலும் அப்படியானவர்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட திருச்சபையில் திருமுழுக்கு பெற்ற உறுப்பினராகவோ அல்லது அருட்பொழிவு பெற்றவர்களாகவோ இருத்தல் வேண்டும் என்பது ஒரு குறைபாடுள்ள கிறிஸ்தவ புரிதலாகும்.

இவ்வாறான முழுமையற்ற புரிதலின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட கிறிஸ்தவ கோட்பாடுகளும் திருமறை விளக்கங்களும் இயேசுவில் கடவுள் நிறைவேற்றிய இறையரசின் பண்புகளுக்கு எதிரான போதனைகளையே பரப்பிக்கொண்டிருக்கின்றது.

கடவுள் நாசரேத்து இயேசு வழியாக நடைமுறைப்படுத்திய இறையரசு எவ்வாறு அனைத்து மக்களுக்கும் மேலும் அனைத்து படைப்புகளுக்கும் உரித்துடையதோ அவ்வாறே இறையரசின் பங்காளிகளும் இனம் மதம் மொழி சமூக அமைப்பு என்கின்ற வேறுபாடுகளையும் கடந்து இறை தரிசனத்தின் அடிப்படையில் ஒருங்கிணைக்கப்பட்டவர்களாகவும் அத்துடன் அதனை நிறைவேற்றுவதில் வேட்கைகொண்டு தம்மை அர்ப்பணிப்பதிலும் தங்கியுள்ளது.

ஆசிய சூழமைவு மற்றும் தலித் இறையியலாளரான இறையியலாளர்கள் தியான்சந்த் கார் அவர்கள் தமது கட்டுரைகளில் இவ்வுண்மையை பின்வருமாறு விளக்கியுள்ளார்.

இறையரசு அனைத்து மக்களுக்கும் உரியது அவ்வாறே அனைத்து மக்கள் பிரிவிலிருந்தும் இறையரசுக்கான பங்காளிகள் என்று அறியாமலே தம்மை பலர் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசுவின் மேசிய அடையாளம் இன்று பலருடைய வாழ்க்கையில்

தொடர்ச்சியாக பிரதிபலித்துக் கொண்டே இருக்கின்றது, அவ்வாரானவர்கள் அநீதிக்கும் அடக்குமுறைக்கும் இலக்காகும் வலுவற்ற மக்களின் துயர்நிலை கண்டு அம்மக்களின் நல்வாழ்வுக்காகவும் நீதிக்காகவும் மானிடவிடுதலைக்காகவும் துணிந்து களமிறங்கி அநீதிகளை எதிர்த்து தங்களை அர்ப்பணித்து போராடி வருகின்ற ஒவ்வொரு தனிமனிதர்களிலும் அல்லது குழுமங்களிலும் அத்தகைய மேசியத்தன்மை பிரதிபலித்துக்கொண்டே இருக்கின்றது. மேலும் அவ்வாறு இறையரசின் பங்காளிகளாக தம்மை அடையாளப் படுத்துவோர் சமய இன வர்க்க சமூக வேறுபாடுகளை கடந்து தம்மை அர்ப்பணித்து செயலாற்றிக்கொண்டிருக்கின்றனர் என்பது இன்னும் ஓர் உண்மையாகும்.

இலத்தின் அமெரிக்கா விடுதலை இறையியல், ஆசிய மற்றும் ஆபிரிக்க சூழமைவு இறையியல்கள் என்பன இவ்வுண்மையை தொடர்ச்சியாக வெளிகொணர்ந்தவண்ணம் இருகின்றது. இது ஓர் உண்மை என்பதுடன் காலத்தின் தேவைக்கேற்ப இறைதிருவுளத்தின் படி வெளிப்படுத்தப்பட்ட இறைவெளிபாடாகும் என்பதே இன்னும் பொருத்தமானதாக இருக்கும். குறிப்பாக இலங்கையில் இன்றைய போருக்குப் பின்னரும் தொடர்ச்சியாக காணப்படும் அரசியல் தீர்வற்ற நிலை மற்றும் பொருளாதார மற்றும் சமூக சுமுகமற்ற தன்மை என்பன தொடர்ச்சியாக தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு பாதகத்தையே ஏற்படுத்திய வண்ணம் இருக்கின்றது.

குறிப்பாக யுத்தத்தின் போதும் யுத்தம் நிறைவடைந்து இறுதி விசாரணைகளின்போதும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உண்மை நிலைவரத்தை அறிந்து கொள்ளவும், தொடர்ச்சியாக சிறையிலிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும், திட்டமிட்ட நில அபகரிப்பினால் தமது வாழ்விடத்தையும் வாழ்வாதார தளத்தையும் இழந்து நிற்கும் ஏதிலிகளின் நீதிக்காகவும், தம்மை அர்ப்பணித்து

போராடிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரிலும் இயேசுவின் மேசிய அடையாளங்கள் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

உதாரணமாக வலிந்து காணமலாக்கப்பட்டவர்களின் உண்மை நிலையினை தெரிந்துகொள்வதற்காக பொதுவெளிகளில் களமிறங்கி போராடிக் கொண்டிருக்கும் அன்னையர், கணவனை இழந்தோர் மற்றும் பெற்றோரை இழந்த பிள்ளைகள் இவர்கள் வழியாக இன்று மேசியா அடையாளப்படுத்தப்பட்டு கொண்டிருக்கின்றார், அதாவது இவ்வுலகையும் அதனுள் காணப்படும் அனைத்து படைப்புகளையும் படைத்து பராமரித்து வரும் கடவுள் இவ்வாரு போராட்டங்களிலும் கிளர்ச்சிகளிலும் இயக்க சக்தியாக உடன் இருக்கின்றார் என்பது ஓர் உண்மையாகும். இவ்வாறு தங்களை அர்ப்பணித்து போராடிக்கொண்டிருப்போர் இனம் சமயம் மற்றும் சமூக அடிப்படையில் வேறுபட்டவர்களாக இருந்த போதும் இவர்கள் யாவரும் இறையரசின் பங்காளிகளாக இருக்கிறார்கள் என்பது இறை வெளிப்பாடாகும்.

இச்சிறு கட்டுரை வழியாக காண்பிக்க முயலுவது என்னவெனில் இலங்கை சூழமைவில் அனைத்து மக்களுடைய ஜனநாயக மற்றும் மனித உரிமைகளின் உத்தரவாதத்திற்காகவும், தமிழ் முஸ்லிம் சிறுபான்மை மக்களுடைய பாதுகாப்பானதும் நீதியானதுமான இருப்பு நிலையை உறுதி செய்வதற்கும், துயரப்படுகின்ற அனைத்து மானிட குழுமங்களின் விடுதலைக்காகவும் தங்களை அர்ப்பணித்து களம் இறங்கி குரல் கொடுத்துக் கொண்டிருப்போர் பல் சமய அல்லது சமயம் சாரா தனிநபர்கள் மற்றும் குழுக்களாக காணப்படும் அனைவரும் இறையரசின் பங்காளராவார். இவர்கள் வழியாக இயேசுவின் மேசிய அடையாளங்களை இன்று நாம் காண்கின்றோம், மேலும் கடவுளுடைய மீட்புத்திட்ட நடைபெற இவர்கள் காரணமாக இருக்கின்றார்கள். ஆகவே, கிறிஸ்தவ திருச்சபைகளும் அதன் அருட்பணியர்களும் இவ் இறைவெளிப்பாட்டை நன்கு புரிந்துக்கொண்டு பல்சமய மற்றும் சமயம்

சாரா மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உடன் இணைந்து செயல்படுவது காலத்தின் கட்டாயமாகும். ஏனெனில் இச்செயல்பாடுகளானது இன்றைய கால சூழமைவின் தேவைக்கேற்ப முன்னெடுக்கப்படும் கிறிஸ்தவ அருட்பணியாகும்.

மற்றுமொரு ஆசிய இறையியலாளரான ஞானா ராபின்சன் அவர்கள் இவ்வுண்மையை விளக்கும்போது, கிறிஸ்தவ நம்பிக்கையானது அனைத்து மக்களுடைய நல்வாழ்வை ஏற்படுத்துவதற்கு ஏற்றவகையில் காணப்படுகின்றது. ஆயினும் அது ஒரு குறிப்பிட்ட சூழலியல்-கலாச்சாரத்தோடு ஒன்றிணைந்து காணப்படுவதனால், உலகிலுள்ள பல்வேறு சூழலில் வாழுகின்ற வேறுபட்ட சமூக கலாச்சாரத்தை கொண்ட மக்களால் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. அத்துடன் பல்சமய நம்பிக்கைகள் நிறைந்த சூழமைவில் முரன்பாடுகளையும் வன்முறையையும் தோற்றுவிக்கிறது. ஆகவே உலகிலுள்ள அனைத்து மக்களும் தங்களது சூழமைவுக்கு ஏற்ப புரிந்துக்கொள்ளக் கூடிய வடிவத்தில் எடுத்தியம்புவது காலத்தின் தேவையாகும்.

அரசியல், பொருளாதார, மற்றும் சமூக கட்டமைப்புகளில் ஆதிக்கத்தாலும் வல்லமையினாலும் தொடர்ச்சியாக பல்வேறு வடிவங்களில் அடக்குமுறைகளையும் அநீதிகளையும் சந்தித்துக் கொண்டிருக்கின்ற சிறுபான்மை மற்றும் வலுவற்ற சமூகங்கள் சார்பாக நீதியையும் சமத்துவத்தையும் கட்டியெழுப்புவதற்காக புரட்சிகளும் கிளர்ச்சிகளும் ஈடுபடுதல் கிறிஸ்தவ நற்செய்தியின் ஊற்று ஆகும். கிறிஸ்தவ நற்செய்தியும் அதன் செயல்பாட்டு வடிவங்களும் அனைத்து மக்களுடைய நல்வாழ்வைறும் உறுதி செய்தல்வேண்டும். அவ்வாறு தேவையில் இருக்கின்ற அனைத்து துயரப்படுகின்ற மக்கள் சார்பாக செயல்படுகின்ற தனிநபர்களோடும் குழுமங்களோடும் இறைதரிசனத்தின் பால் திருச்சபைகளும் அதன் அருட்பணிகளும் ஒன்றுபட்டு திரல்ச்சியடைதல் வேண்டும்.

இவ்வாறான கிறிஸ்தவ இறையியல் மற்றும் நம்பிக்கைகளின் பரிணாம வளர்ச்சியின் அவசியம் தொடர்பாக ஆசிய ஆயர்களின் பேரவை மற்றும் ஆசிய கிறிஸ்தவம் மன்றம் தொடர்ச்சியாக பல ஆழமான கற்கைகளை மேற்கொண்டு இறைவெளிப்பாடு உண்மைகளை முன்மொழிவுகளாகவும் கிறிஸ்தவ நம்பிக்கைகளாகவும் தெளிவுபடுத்தியுள்ளனர். அதன்படி ஐரோப்பிய கலாச்சாரத்துடனும் சித்தாந்தங்களுடனும் உருப்பெற்று ஆசிய மண்ணில் கால் பதித்த கிறிஸ்தவம் ஆசிய சூழலமைவு பதார்த்தங்களிலும் மற்றும் ஆசியாவுக்குரிய சிறப்பம்சமான பல்சமய கலாச்சார பண்புகளுக்கு ஏற்புடையவகையிலும் கிறிஸ்தவ நற்செய்தியை முன்னெடுக்க திருச்சபை இச்சூழமைவில் மனுவுரு (Incarnation) எடுத்தல் மிக அவசியமானதாகும். அப்போதுதான் கிறிஸ்தவத் திருச்சபை ஆசிய மக்களின் உள்ளத்தோடும் உணர்வோடும் வாழ்வியல் கட்டமைப்புகளோடும் இரண்டறக் கலக்கமுடியும். இதன்மூலம் வாக்காகிய நற்செய்தி ஆசிய மக்களுடைய புது வாழ்வுக்காண வழிமுறையாக ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு கிறிஸ்தவ நம்பிக்கையில் இருந்து ஆசியமக்களுடைய நல்வாழ்வுக்காகவும் விடுதலைக்காகவும் அருட்பணிகள் வாழ்வியல் பண்பாக வெளிப்படும். ஆசிய மக்கள் மத்தியில் இறையரசின் விழுமியங்களை விதைக்கப்பட்டு செழிப்புற வளரச்சியடையும்.

இலங்கையில் போருக்குப் பின்னான சூழமைவில் யதார்த்த நிலையை நினைவு கொள்வது அவசியமாகவுள்ளது. குறிப்பாக பின்வரும் அவலநிலை காரணமாக போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ச்சியாக துயரப்படுகிறவர்கள். அவர்களில் சிலர் கிறிஸ்தவர்களாக காணப்பட்ட போதும் இன்னும் மக்கள் மத்தியில் புதுவாழ்வு அல்லது மானுட விடுதலையுடன் கூடிய மாற்றுருவாக்கம் பெற்ற வாழ்வை இன்னும் காணமுடியாதுள்ளது..

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், தொடர்ச்சியாக சிறைகளில் துயரப்படும் போர்க்கால அரசியல் கைதிகள், தொடர்ச்சியாக இலங்கை அரசின் திட்டமிட்ட சிங்கள-பௌத்த குடியேற்றத்தின் விளைவாக வாழ்விடங்களையும் வாழ்வாதாரம் நிலங்களையும் இழந்த மற்றும் இழந்துக்கொண்டிருக்கின்ற மக்களுக்கான நீதி நிலைநாட்டுவது கிறிஸ்தவ அருட்பணியாகும்.

சமய ஒடுக்குமுறையினால் தொடர்ச்சியாக துயரத்திற்கு உள்ளாகும் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமயத்தவர்கள், சாதிய ஒடுக்குமுறையால் பாதிக்கப்படுவோர் பொருளாதார சுரண்டலினால் நான்கு நூற்றாண்டுகளாக தொடர்ச்சியாக வலுவற்ற நிலையில் காணப்படும் மலைய மக்கள் போன்றோரின் அவலநிலைக்கு கிறிஸ்தவ நம்பிக்கை பதிலளிக்க வேண்டும்.

ஆசிய ஆயர்களின் பேரவை மற்றும் மற்றும் ஆசிய கிறிஸ்தவ மன்றம் தரிசனம் காண்கின்ற கிறிஸ்தவத் திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ நம்பிக்கை நடைமுறையில் காணப்படுமாயின் மேற்குறிப்பிட்ட மக்களுடைய வாழ்வில் நிச்சயமாக கிறிஸ்தவத் திருச்சபைகளும் அதன் அருட்பணி கொள்ளும் இரண்டற கலந்து இருக்கும். ஏலவே குறிப்பிட்டதைப் போல நீதிக்காகவும் மானுட விடுதலைக்காகவும் அனைத்துப் படைப்புகளின் நல்வாழ்வுக்காகவும் தங்களை அர்ப்பணித்து களமிறங்கி போராடும் கிளர்ச்சியில் ஈடுபடும் அனைத்து செயல்பாட்டாளர்களும் இறையரசின் பங்காளிகள் என கிறிஸ்தவ திருச்சபை அங்கீகரித்து அவர்களது செயல்பாடுகளுடன் கிறிஸ்தவ அருட்பணி கூட்டுறவுடன் காணப்படும்.

(தொடரும்…….)

**ராஜன் ரோகான்**

**மட்டக்களப்பு**

அலங்காரம். ஆ, ஆசிய மக்களின் இயேசு கிறிஸ்த்து, சென்னை-2008

எல்பின்ஸ்டன். ஜா மரிய டேல்லஸ். விவிலிய விருந்து, சென்னை, மார்ச் 2020.

பாஸ்டியன் வீலங்கா. நல்லெதிர்பார்பில் நாம் நடந்தால், மதுரை- 2009

சந்திரகாந்தன். ஏ.ஜே.வி. நவின இறையியலின் அடிப்படைகள், திருநெல்வேலி-1995

ஞான இறபின்சன், கிறிஸ்தவ நம்பிக்கையும் தற்கால விளக்கங்களும், மதுரை

ஸ்ரீபன். அ. இறை விழுமியம், யாழ்ப்பாணம்- 2008

Milburga Fernando, Harvest Dream of Fr. Mike, Colombo-1998

Sugirtharaja. R. S. Asian Faces of Jesus, Orbis Books 1993.

# தொலைக்கப்பட்டது மீளவும் கிடைக்குமா.....?

2016 ஆம் ஆண்டு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் தொடர்பான கருத்தறியும் செயலமர்வு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசசெயலகத்தில் நடைபெற்றது. இவ் நிகழ்விற்கு நானும் அழைப்பு பெற்றிருந்தேன். அங்கே காணாமற்போன உறவுகளின் உறவினர்களோடு நேரடியாக கலந்துரையாட வாய்ப்பு கிடைத்தது. உறவினர்களின் உணர்வுகளை விபரிப்பதற்கு என் உள்ளத்தில் வார்த்தைப் பற்றாக்குறை ஏற்பட்டது.

ஒரே ஒரு நிகழ்வை மாத்திரம் பதிவிட விரும்புகிறேன் எனது அருகில் இருந்த வயோதிப தாய் ஒருவர் கைகளில் தனது மகளின் அழகிய புகைப்படத்தை தாங்கிய வண்ணம் இருந்தார். அவர் யாரிடமும் எதுவும் பேசவில்லை, ஆனால் கண்களில் கண்ணீரானது மணிக்கணக்காக வழிந்தோடிய வண்ணம் காணப்பட்டார். இறப்பதற்கு முன் ஒரு தாய் தனது மகளின் அழகிய முகத்தை காண வேண்டும் என்கின்ற அவா உள்ளத்தில் வெகுண்டு எழுந்திருந்தது மகள் திரும்பவும் வருவாள் என்ற நம்பிக்கையுடன் காணப்பட்டார்.

காணாமற் போனோர்களை கண்டறியும் ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் படி 30 வருட கொடூர யுத்தத்தில் 65000 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என அறிக்கைகள் கூறுகின்றன.

- இவர்கள் எங்கே
- என்ன நடந்தது
- மீளவும் வருவார்களா?

என்கின்ற கேள்விகளோடு நடைப் பிணங்களாக உறவினர்கள் வலம் வருகின்றனர்

திருவிவிலியத்தில் லூக்கா எழுதிய நற்செய்தி நூல் அதிகாரம் 15ல் வருகின்ற காணாமற் போன ஆடு, நாணயம், மகன் ஆகிய உவமைகள் தருகின்ற செய்தியானது கிறிஸ்தவத்தின் முழு வடிவத்தையும் கோடிட்டு காட்டுகின்றது எனலாம். நற்செய்திக்குள் நற்செய்தியாக திருவிலிய ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது. காணாமற்போன ஆடு மற்றும் நாணயம் ஆகிய இரண்டு உவமைகளின் செய்தியானது மிகவும் ஆழம் நிறைந்தது 100 ஆடுகளில் ஒன்று தொலைக்கப்பட்டால் ஆயன் 99 ஆடுகளோடு திருப்தி கொள்ளாமல் காணாமற்போன ஆட்டைத் தேடி கண்டு பிடிக்க புறப்படுகிறான். கண்டு பிடித்த பின் தோளில் போட்டு தன் மகிழ்வை ஏனைய உறவுகளுடன் பகிர்ந்து கொள்கிறான். ஒரு பெண்ணிடம் 10 நாணயங்கள் உள்ளன அவற்றில் ஒன்று காணாமற்போனது அந்தப் பெண்மணி 9 நாணயங்களோடு திருப்தி கொள்ளாமல் தொலைக்கப்பட்ட ஒரு நாணயத்தை கண்டு பிடிக்கும் மட்டும் தேடினாள் கண்டு பிடித்த பின் அதை சக தோழிகளுடன் பகிர்வதனை காணலாம்.

இந்த இரண்டு உவமைகளும் இரண்டு வகையான மனித வர்க்கத்தை குறிப்பிடுகின்றன. ஆட்டைப் போன்றோர்கள் தொலைத்த இடம் தெரியாது குரல் மட்டும் கொடுக்க முடியும். நாணயம் போன்றவர்கள் தொலைத்த இடமும் தெரியாது குரலும் கொடுக்க மாட்டார்கள். இவ் இரண்டு மக்களையும் கடவுள் கண்டு பிடிக்கும் மட்டும் தேடுகிறார் என்கிற உண்மை நமக்கு தெரிய வருகின்றது. நம்பிக்கையோடு தேடி இருவரும் கண்டு கொண்டனர், மகிழ்வை ஏனைய உறவுகளுடன் பகிர்ந்தனர். தொடக்கம் கவலையையும் முடிவு மகிழ்வையும் கொடுப்பதைக் காணலாம்.

இவ் உண்மைகளை எமது காணாமல் ஆக்கப்பட்ட மக்களோடு ஒப்பிடுகையில் பின்வரும் உண்மைகள் புலப்படும்

1. தொலைக்கப்பட்டது சிறுபான்மைப் பகுதி
2. எமது மக்கள் பலம் நிறைந்தவர்களால் ஆயுத முனையில் காணாமல் செய்யப்பட்டனர்
3. தொலைக்கப்பட்டவர்களை நம்பிக்கையுடன் தேடிக் கண்டு கொண்டனர். ஆனால் நம்பிக்கை இல்லாத சூழல் தொலைக்கப்பட்டவர்கள் மீளவும் கிடைப்பார்களா, இல்லையா?
4. உவமையில் தொலைக்கப்பட்ட ஆடு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டதால் மட்டற்ற மகிழ்வு ஆனால் தொலைக்கப்பட்டவர்கள் கண்டு பிடிக்கப்பட்டால் உறவினர்களுக்கு மகிழ்ச்சி உண்மை நிதர்சனமாக வெளியில் வருவதால் காணாமல் செய்யப்பட்டதற்கு காரணமானவர்கள் நீதிமுன் நிறுத்தப்பட வேண்டும்.
5. தொலைக்கப்பட்டவர்கள் திரும்பி வருகையில் எமது சமூகம் அதனை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளீர்களா? பெண்கள் திரும்பி வரும்பொழுது அவர்களுக்குரிய மனித மாண்பு மீண்டும் மலருமா?

மேற்குறிப்பிட்ட உண்மைகளோடு ஆண்டவர் இயேசு கூறிய உவமைகளை ஒப்பீடு செய்கின்ற பொழுது கடவுள் பெரும்பான்மை மக்களோடு அல்லது வலுவுள்ள மக்களோடு தம்மை அடையாளப்படுத்துவதில்லை மாறாக வலுவிழந்த மாண்பிழந்த மக்களோடு தம்மை அடையாளப்படுத்துகிறார் தொலைக்கப்பட்ட மக்களை தேடுவதோடு மட்டுமல்லாமல் இதற்கு காரணமானவர்கள் பொறுப்பானவர்கள் அனைவரிடம் இருந்து மக்கள் சமூகமாக நீதியை கேட்டுக் கொண்டே இருக்கிறார். தொலைக்கப்பட்ட மக்கள் மீள வரும்பொழுது அவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள்

தொடர்பில் உண்மையும் நீதியும் வெளிவருகின்ற பொழுது அதனை கட்டுப்படுத்த கடத்தப்பட்ட மக்கள் கொல்லப்படவும் வாய்ப்புண்டு.

எனவே கொல்லப்பட்ட மக்களின் உறவுகளை மறு வாழ்வுக்குள் கொண்டுவர கடவுள் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபரோடும் கூட இருந்து அவர்களை பாதுகாக்க வேண்டியவராக இருக்கிறார்.

இறுதியாக இயேசு கூறிய உவமைகளில் தொலைக்கப்பட்ட ஆடு மற்றும் நாணம் போன்றவை கண்டு கொள்ளப்பட்டன ஆனால் எம் மக்களின் நிலையோ தொலைக்கப்பட்ட மக்களுகக்கு நடந்தது என்னவென்கிற கேள்விகளோடு உறவுகள் திரும்பி வருவார்களா இல்லையா என்கிற எதிர்பார்ப்புகளோடு தேடும் உறவுகளில் பலரம் இறந்த வண்ணம் இருக்க வாழ்வு நகர்த்தப்பட்டு கொண்டே இருக்கிறது.

**அருட்பணி. வே.டேவிட் நிருஷிகன்**

**பகுதிநேர விரிவுரையாளர் CTS**

**சத்தியபுரம் திருச்சபை**

**CACM**

# உயிர்ப்பு ....வாழ்வின் மையம்

உயிர்ப்பின் அனுபவம் வெற்றியின் அனுபவம். அந்த அனுபவம் நற்செய்தியின் தொடக்கமாகவும், கிறிஸ்தவ வரலாற்றின் மையமாகவும், உயிர்நாடியாகவும் உள்ளது. இந்த அனுபவத்தை பெற்று அவரது புனித வாழ்வில் பயணிக்கும் எமக்கு ஆண்டவர் எதிலிருந்து வெற்றி அடைந்தார் என்ற வினா எம்மை புதுப்பிக்கிறது. ஆண்டவராகிய இயேசு பாவத்தின் பேரிலும், பாவத்திற்கு காரணமாயிருக்கும் சாத்தானின் பேரிலும் போராடி சிலுவையிலே வெற்றிசிறந்தார். சாத்தானின் நண்பர்களான போலிச்சமயம், சமயங்களின் காழ்புணர்ச்சி, ஆதிக்கப்பண்பாடு, பழிவாங்கும் அரசியல் சிந்தனை போன்ற அனைத்தையும் துகிலுரிந்து தன்னை ஒப்புக்கொடுத்தார்.

அவற்றின் உண்மைக் கோலத்தை அம்பலமாக்கினார். எனவே இறைமைந்தனை அதாவது துயருறும் மக்களின் பிரதிநிதியாக வெளிப்படும் மானிடமகனை மரணபிடியில் வைத்துக்கொள்ள எந்த ஒரு சக்திகளாலும் முடியவில்லை. மரணத்தின் கூர் ஒடிந்து பாதாளத்தின் சக்திகள் அடக்கப்பட்டன. இயேசு உயிரோடு எழுப்பப்பட்டார். அவர் உயிருடன் வாழ்கிறார். அந்த வாழ்வினை எப்போ ஒரு நாள் தருவார் என்று அல்ல இன்றே இப்பொழுதே நமக்கு தருகிறார். இது மறுக்கமுடியாத உண்மை.

மேற்கூறிய கருத்துக்களைவிட கிறிஸ்தவ விசுவாசிகளான நமக்கு வேறுகருத்து இருக்கமுடியாது. எனினும் இயேசுவின் உயிர்த்தெழல் மூலமாக நமக்கு இறைவன் மாபெரும் வெற்றி வாழ்வை தந்துள்ளார் என்ற நற்செய்தியை முழுவதுமாக நாம் இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை. இந்த புதுவாழ்வை புரிந்து இதன் அடிப்படையில் நமது வாழ்வு அமையுமானால் அல்லது அதற்கு எற்றாப்போல் வாழ்வோமாயின் நமது கிறிஸ்தவம் கேள்விக்குறியாக அமையாமல் எப்பொழுதும்

வியப்புக்குறியாக திகழ்ந்து அது பலரைக் கவர்ந்து இழுக்கும் மார்க்கமாக அமைந்திருக்கும்.

நம்மெல்லாருக்கும் இறப்பு பற்றிய பயம் பிடித்து அது நம்மை பின்னோக்கி இழுப்பதினால் இறப்பின் பேரில் இயேசு கண்ட வெற்றியும் அதன் விளைவாக இறப்பிலிருந்து நாம் பெறப்போகிற வெற்றியும் நம்முடைய சிந்தையில் ஒரு மேலான இடத்தை பிடித்துவிட்டது. இயேசுவின் உயிர்த்தெழல் இன்றைய நமது வாழ்க்கையை எப்படி வளப்படுத்துகிறது என்ற வினாவை அதிகமாக நாம் கேட்பதில்லை. அவற்றை கேட்டு அந்த புதுமையின் நற்செய்தியை புரிந்து கொள்வோம்.

### கடவுளுடன் உறவு புதுப்பிக்கப்பட்ட பெருவாழ்வு

முதலாவதாக இயேசுவின் உயிர்த்தெழல் மூலமாகவே நாம் நீதிமான்களாக அதாவது கடவுளுக்கு ஏற்புடையவராக, கடவுளுடன் உறவு புதுப்பிக்கப்பட்டவர்களாக மாறி இருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். நீதிமான்களாக்கப்பட்டுவிட்டோம் என்பதால் ஆக்கினைத் தீர்ப்பில்லாமல் நித்திய வாழ்வுக்குட்படுவோம் என்பதில் மட்டும் நாம் நம்பிக்கை வைத்து வாழ்கிறோம். மீண்டும் மீண்டும் இறுதிப்பயணம் நோக்கியே, நித்தியவீட்டைப் பற்றியே நமது நம்பிக்கை அமைந்து விடுகிறது.

ஆனால் முறிந்துபோயிருக்கும் அல்லது துண்டிக்கப்பட்ட உறவை சரிசெய்து கடவுளுக்கேற்புடையவர்களாக வாழ்வது எப்படி? என்ற வினாவை நாம் கேட்பது கிடையாது. இது இரண்டு குறிப்புகளைக் கொண்டிருக்கும்

1. விசுவாச அறிக்கையில் நிலைத்து வாழ்வது
2. சாத்தானின் சக்திகளில் மற்றும் பொய்களிலிருந்து விடுபட்டு வாழ்வது.

இந்த இரண்டு கூறுகளின் உண்மையை புரிந்து கொள்வது அவசியமானது.

**விசுவாச அறிக்கையில் நிலைத்து வாழ்வது**

ஆண்டவராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு கடவுள் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்திலே பற்றுறுதி கொண்டால் இரட்சிக்கப்படுவாய். பவுல் இப்படி எழுதிய நாட்களில் இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுவது இன்று போல எளிதான தொன்றல்ல. அது மிக்க ஆபத்தானது. உரோம பேரரசன் தன்னைத்தான் யாவரும் ஆண்டவரென்றும் இறைமைந்தென்றும் அறிக்கை செய்ய வேண்டுமென வற்புறுத்தினான். இயேசுவை ஆண்டரென்று கிறிஸ்தவர்கள் சொன்னது அவனுக்கு அரச துரோகமாக தெரிந்தது. எனவே உரோமப் போர்ச்சேவகர்கள் "இராயனே ஆண்டவர் என்று சொல்லி இயேசுவை சபிக்கப்பட்டவன் என்று உன் வாயால் சொல்லி அறிவி என்று வற்புறுத்தினார்கள். அப்படி அறிக்கை செய்ய மறுத்தவர்களை வேறு எந்த கேள்வியும் இல்லாமல் வாளால் வெட்டி கொன்றார்கள். இதனாலேயே 1 கொரிந் 12 : 3 ஒருவரும் தூய ஆவியாராலேயன்றி இயேசுவை ஆண்டவர் என்று சொல்ல முடியாது என்கிறார் பவுல்.

எனவே தான் பவுல் ரோமர் 10: 11 ல் அவரை நம்புகிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்று இரு பொருள்பட சிலேடையாக கூறுகிறார். அதாவது இயேசுவை ஆண்டவர் என்று வெட்கமும் அச்சமுமின்றி சொல்வது உடனடியாக உங்களுக்கு இறப்பை கொண்டுவந்தாலும், இறுதியில் கடவுளால் நீங்கள் இரட்சிப்பு அடைவதனால் கடவுள், நீங்கள்

வெட்கப்படாமல் பார்த்துக் கொள்வார். உங்கள் பற்றுறுதியின் பயனை நீங்கள் கண்டடையாமல் போவதில்லை என்று உறுதியாக கூறுகிறார். எனவே இப்பொழுது வெட்கத்திற்கும் பயத்திற்கும் இடமளிக்க வேண்டாம் என்கிறார். இப்படி வெட்கமும் அச்சமுமற்ற அறிக்கை இன்று குறைந்து வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன் மதமாற்ற தடைச்சட்டத்தை எந்த எதிர்ப்பும் இன்றி நிறைவேற்றினார். அதற்கு துணைபோன கிறிஸ்தவ விசுவாசிகளும் மத தலைவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

## சாத்தானின் தீமைகளைக் களைந்து பெருவாழ்வு

இரண்டாவதாக நீதிமான்களாக்கப்பட்டதனால் பாவத்தால் துண்டிக்கப்பட்ட இறையுறவு புதுப்பிக்கப்பட்டுள்ளது என்னும் போது எப்படிப்பட்ட பாவத்தால் இறையுறவு துண்டிக்கப்படுகிறது என்ற வினா எழும்புகின்றது. பாவத்தைப் பற்றிய அரைகுறை விளக்கமே.

நம்மை பிடித்திருக்கும் பாவம் என்ன என்று கேட்டால் ஓரிரு அறம் சார்ந்த செய்கைகள் எடுத்துக் கூறப்படுகிறது. உ.ம் மதுபோதை, கள்ளத்தராசு. உண்மையான இறைவனைக் காணமுடியாமல் நம்கண்களை முடி மறைக்கும் சமய முகமுடிகள், கடவுளின் பெயராலேயே அமுலாக்கப்படும் அநியாயங்கள். இறை நீதியைத் தேடுவதில் காணப்படும் அசட்டைகள், நம்மை தடுக்கும் தன்னலங்கள், பொறாமைகள், இச்சைகள் இவையாவும் இறையுறவிலிருந்து நம்மை துண்டித்து அந்நியப்படுத்தும் பாவங்கள் என நாம் நினைப்பதில்லை.

இயேசு நமது பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்பது அவரது சிலுவையில் வெளிப்பட்டது என்பது நமது நம்பிக்கை. ஆனால்

அந்த மீட்புச்செயல் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என ஒரு கணம் சிந்திப்போம்.

பிசாசின் பொய்களுக்கு மயங்கி இறைமைந்தனையே கொலை செய்யத்துணியும் சமய வெறி, நீதிக்காக போராடத் தொடங்கி வன்முறைகளுக்குள் செல்லும் அவலம், மனிதம் மழுங்கடிக்கப்பட்ட தருணங்கள், பயங்கரவாதத்தை ஒழிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அரசின் அசாதாரணச் செயல்கள் படுகொலைகள், ஆக்கிரமிப்புக்கள், பொருளாதார இலாபநோக்கிற்காக திட்டங்களைத் தீட்டி வெறியாட்டம் போடும் ஏகாதிபத்திய நாடுகளின் செயல்கள், அவற்றுக்கு ஆதரவு வழங்கும் கிறிஸ்தவம் இவை ஒன்றும் பாவமாக தோன்றவில்லை. ஆனால் இந்த பாவங்களின் திரட்டு தான் இயேசுவை சிலுவையில் கொன்றது. இருந்தாலும் எதிரியையும் மன்னித்து ஏற்கும் கடவுளின் மகனாம் இயேசுவினால் இந்தக் கொடிய பாவங்களை ஏற்போரும் நீதிமான்களா மாற உயிர்த்தெழுதல் வழியை ஏற்படுத்துகிறது.

**உயிர்த்தெழுந்த பெருவாழ்வும் மரண சக்திகளை முறியடிக்கும் பெருவாழ்வும்**

இறுதியாக உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்று ஆண்டவர் இலாசருவின் கல்லறையருகே நின்று மாத்தாளிடம் சொன்ன வார்த்தையின் பொருளையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். இயேசுவை மாத்தாள் மேசியா என்று அறிக்கையிட்டார். அது மட்டுமல்ல கடைசிநாளில் மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார் என்ற நம்பிக்கையையும் அவர் கொண்டிருந்தார். பல வகைகளில் மாத்தாளின் பற்றுறுதி இன்றைய கிறிஸ்தவர்களின் நம்பிக்கைக்கு ஒத்திருந்தது. எனலாம். இருப்பினும் ஆண்டவர் மாத்தாளை பாராட்டவில்லை அவருடைய பற்றுறுதி குறைவுள்ளதாக காணப்படுவதாக அவருடன் பேசினார். விசுவாசமுள்ளவராயிருந்தால் நீர் இப்பொழுதே கடவுளுடைய

மாட்சி ஒளிர்வதைக் காணலாம் என்றார். இலாசருவை உயிரோடு கல்லறைவிட்டு வெளிவரச் சொன்னார்.

அவர் உயிரோடு எழுப்பியவர்கள் ஒருசிலரே. யவீருவின் 12வயது மகள், நாயீன் ஊர் விதவையின் மகன், லாசரு ஆகியோர் மட்டுமே. ஆண்டவர் செய்த வல்ல செயல்கள் அனைத்துமே அடையாளச் செயல்கள். அப்படியானல் இலாசருக்கு உயிர் கொடுத்ததும் யவீருவின் மகள், நாயீன் ஊர் விதவையின் மகன் ஆகியோருக்கு உயிரளித்ததும் எதை அடையாளப்படுத்துகிறது அகால மரணங்கள் கடவுளுடைய சித்தத்திற்கு எதிரானவை என்பதையே அடையாளப்படுத்துகின்றன.

உயிருக்கும் வாழ்விற்கும் ஊற்று கடவுள். மரணம் ஒரு இறைவிரோத செயலே. எல்லா மரணமுமே இறைவனது முதல் திட்டத்திற்கு எதிரானவை. பாவத்தால் உள்ளே நுழைந்து பாவ நிலையில் மனிதரோ படைப்போ என்றென்றும் உயிர் வாழ்ந்தால் அது நல்லதல்ல என்பதாலேயே மரணம் குறிக்கிட அனுமதிக்கப்பட்டது ஆனால் அதற்கு ஒருமாற்றத்தையும் கடவுள் கண்டு பிடித்தார். இருப்பினும் அகால மரணங்கள் பிறப்பு வளர்ச்சி பயனுள்ள வாழ்வு ஆகியன இயற்கை விதிகளுக்குட்பட்டு நடைபெறுவதில்லை.

சுற்றுச் சூழல் மாசினால் ஏற்படும் தாக்கங்கள், இரசாயண உரங்களால், நீர் உணவு தானியங்கள் காய்கறிகள்.... முதலியவற்றை பாதிப்பதால் ஏற்படும் மரணங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக வறுமையால், கடின உழைப்பால் ஓய்வு குறைவதால் ஏற்படும் பாதிப்புக்கள், இப்படி பல்வேறு காரணங்களால் ஏற்படும் கொலை மரணங்களுக்கு கடவுள் காரணமாக இருக்கமுடியாது. இவற்றிற்கு காரணமாய் இருப்பவர்கள் மனந்திரும்பினால் இந்த மரணச் சக்திகளை முறியடிக்க முடியும். மக்கள் நினைத்தால் இதை செய்யலாம் என்பதற்கு பல நாடுகள் உதாரணமாக அமைந்துள்ளது. சரியான ஒழுக்க

விதிகளைப் பயன்படுத்துவதாலும், உணவு பழக்கங்களைக் கடைப்பிடிப்பதாலும், பாரிய அளவில் உலகை உலுக்கும் அம்மை, கோவிட் 19 போன்ற நோய்களுக்குத் தடுப்பு ஊசிகளைக் கண்டு பிடித்து அவற்றை பயன்படுத்துவதாலும் இவற்றை குறைக்கமுடியும். இதற்கு ஜப்பான் போன்ற நாடுகள் உதாரணமாக அமைந்துள்ளது.

எனவே மரணச்சங்கிலிகள் முறிக்கப்படவேண்டும் என்பதே இறைத்திட்டம் என்பதை இயேசுவின் அறிக்கை எமக்கு எடுத்துக் காட்டுகிறது. உயிர்தெழுதலும் வாழ்வும் நானே என்பதில் பேருண்மை இதில் விளங்குகின்றது. எமது கிறிஸ்தவ வாழ்வை பெரிதும் வளப்படுத்தக்கூடிய உண்மை இதற்கு தடையாக இருக்கும் கல்லைப் புரட்டிதள்ளும் வேலையை செய்யவும் உயிர்பெறுகிறவர்களைக் கட்டியிழுக்கும் மரணக்கட்டுகளை அவிழ்த்து விடுதலைச் செயலை செய்யவும் ஆண்டவர் நம்மை அழைக்கிறார். நம்முடைய பற்றுறுதி அறிக்கையின் பலனாக இறைவனின் மாட்சி வெளிப்படவேண்டும்.

எல்லா மரணத்திற்கும் கடவுளே காரணம் என்று கூறுவது எமது மூடநம்பிக்கையாக கல்லறையை மூடியிருக்கும் பாறாங்கலாக அமைகின்றது. இந்த கல்லை புரட்ட நாம் முயற்சிக்க வேண்டும். பாறாங்கற்கள் போன்றவற்றை நாம் புரட்டித்தள்ளவேண்டும் அப்போழுது தான் மரண சக்திகளை எதிர்த்து தள்ளும் ஆற்றல் நமக்கு வரும்.

உயிருடனிருந்தும் உண்மையான விடுதலை உணர்வுடன் வாழமுடியாதபடி அங்கீகரிக்கப்பட்ட அநீதிகளான மரணகட்டுகள் பலரைக் கட்டுகின்றன. அக்கட்டுகள் அவிழ்த்தெறியப்பட வேண்டும். நம்பிக்கையோடும் துணிச்சலுடனும் செயல்பட்டால் கடவுளின் மாட்சி வெளிப்படும். இவ்விளக்கங்களை புரிந்து கொண்டு நீதிக்கு நேரா செயல்படவும் அநீதிக்கு எதிராக குரல்கொடுக்கவும் மரணங்களை

ஏற்படுத்தும் அனைத்து சக்திகளுக்கும் எதிராக செயலாற்றவுமே புதுவாழ்வு எமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய நாளில் நாம் நினைவுகூரும் காலம் சென்ற அருள்திரு. ஈனோக் பூரணமகிபன் புனிதராஜா அவர்கள் உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்ற இயேசுவின் வார்த்தையின் பொருள் விளங்கியவராக இறுதிவரை செயல்பட்டார். அவரது குடும்பத்தாருக்கு ஆண்டவரின் நிறைவான அருளும் ஆசியும் கிடைக்க எமதாண்டவரை பிராத்தித்து இக்கட்டுரையை நிறைவுசெய்கின்றேன்.

**அருட்பணி. T. தேவநேசன்**

**தலைவர். CACM**